செய்தி வெளியீடு எண்: 558 நாள் : 05.11.2014

## செய்தி வெளியீடு , நாள் 05.11.2014

மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு. B V ரமணா அவர்கள் தலைமையில் சென்னை மாநகரில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வு கூட்டத்திற்கு பால் வளத்துறை ஆணையர் / நிர்வாக இயக்குநர் திரு. சுனீல் பாலீவால், இ.அ.ப. அவர்கள் முன்னிலை வகித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை ஆவின் நிறுவனம் மேற்கொள்ள உள்ளது.

ஏற்கனவே மாதாந்திர பால் அட்டை கோரி விண்ணப்பம் அளித்துள்ள நுகர்வோர்களின் விவரங்கள் ஆவின் அதிகாரிகளால் சரிபார்க்கப்பட்டு அதன் உண்மை தன்மை அடிப்படையில் நுகர்வோர்களுக்கு புதிய மாதாந்திர பால் அட்டை வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

நுகர்வோர்களுக்கு மாதாந்திர பால் அட்டைகளை ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாறுதல் செய்வது சுலபமாக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நுகர்வோர்கள் மாறுதல் கோரும் இடத்தில் உள்ள வட்டார அலுவலகங்களில் விண்ணப்பித்து அதனை மாறுதல் கோரும் இடத்தில் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆவின் 16 வட்டார அலுவலகங்களும் அதை சார்ந்து ஆவின் பாலகமும், சொந்த கட்டிடத்தில் இயங்கும் வகையில் ஒரே இடத்தில் நுகர்வோர்களுக்கு சிறப்பான சேவையினை அளிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நுகர்வோர்களுக்கு வழங்கப்படும் பால் பரிசோதனைக் கூடத்தில் எவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது என்பதனை நுகர்வோர் அறியும்வண்ணம் ஆவின் இணையதளத்தில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

. . . . .2

ஆவின் பாலகங்கள் நவீன மயமாக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்பொழுது அண்ணா நகர் பாலகம் நவீன மயமாக்கப்பட்டு விரைவில் திறக்கப்பட உள்ளது. பெசன்ட்நகர் மற்றும் விருகம்பாக்கம் ஆகிய இடங்களில் பாலகங்கள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. அடையார் மற்றும் தி.நகர், ஆகிய இடங்களில் உள்ள ஆவின் பாலகங்களும் நவீனமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆவின் பால் பொருட்கள் விற்பனையை அதிகப்படுத்துவதற்கு சென்னை மற்றும் சுற்றுப்புற இடங்களில் அமைந்துள்ள பெரிய வணிக வளாகங்கள், பொழுதுபோக்கு இடங்கள், மக்கள் அதிகம்கூடும் விழாக்கள் நடக்கும் இடங்களில் விற்பனை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஆவின் இணை நிர்வாக இயக்குநர், திருமதி. ஆர்.கஜலட்சுமி, இ.ஆ.ப., பொது மேலாளர் (விற்பணை) திரு. எஸ்.கே. கதிர்வேலு, மற்றும் ஆவின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**